திருநெல்வேலி
● வெள்ளி ● ஜூலை 12 2019
www.dinamalarnellai.com
தினமலர் நெல்லை

# பாளை., சாரதா கல்லூரியில் மாணவிகள் பேரவை துவக்க விழா

திருநெல்வேலி, ஜூலை 12–

பாளை., சாரதா கல்லூரியில் மாணவிகள் பேரவை துவக்க விழா நடந்தது.




பாளை., சாரதா கல்லூரியில் மாணவிகள் பேரவை துவக்க விழா நடந்தது.

பாளை., சாரதா கல்லூரியில் நடந்த மாணவிகள் பேரவை துவக்க விழா ஆங்கிலத்துறை தலைவர் ரேணுகா அறிமுக உரையாற்றினார்.

திருப்பராய்த்துறை ராமகிருஷ்ண தபோவனம் செயலர் சத்யானந்த சுவாமிகள் துவக்கவுரை ஆற்றினார். கல்லூரி செயலர் யதீஸ்வரி சரவணபவப்ரியா அம்பா ஆசி வழங்கினார். இயக்குனர் சந்திரசேகரன் மகிழ்வுரை வழங்கினார்.

அமெரிக்க கல்லூரி பேராசிரியர் பால் ஆர். ஈடில்மேன், காத்லீன் வெஸ்ட்மேன், சவுஜன்யா தர்மசங்கர் மற்றும் பிரான்சிஸ் சேவியர் இன்ஜினியரிங் கல்லூரி உதவி பேராசிரியர் சிவாஞ்சலி சதாசிவ கம்ப்ளே கலந்து கொண்டனர். சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட பிரியா சந்தானகிருஷ்ணன், ராமாயணத்தில் அமைந்துள்ள நவரசங்களை பற்றி பேசினார். பேரவை தலைவி சக்திலட்சுமி அறிக்கை வாசித்தார். அனைத்துத் துறை மாணவிகளும் உறுதிமொழி எடுத்து கொண்டனர். உதவி பேராசிரியை விஜயலட்சுமி நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். ஏற்பாடுகளை உதவி பேராசிரியை ரேவதி மற்றும் பலர் செய்திருந்தனர். மாணவிகள் பேரவை துணைத்தலைவி சினேகா நன்றி கூறினார்.